

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன் கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம் சங்கரன்கோவில் சீதாலட்சுமி மகாலில் மாவட்ட அவைத்தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் நவீன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன்,பரமகுரு சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளர் ராமஜெயம், மாநில நிர்வாகிகள் டாக்டர் செண்பக விநாயகம், முத்துச்செல்வி நகர செயலாளர் பிரகாஷ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தி.மு.க மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை விமர்சனம் செய்ய

# எந்தவித அருகதையும் இ.பி.எஸ்.க்கு இல்லை!

## சங்கரன்கோவிலில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



தென்காசி.செப்.14-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் புதிய பேருந்து சேவை தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று சங்கரன் கோவில் முதல் புளியங்குடி, சங்கரன்கோவில் முதல் சுப்புலாபுரம் ஆகிய புதிய பேருந்து சேவைகளை தொடங்கி வைத்தனர். தொடர்ந்து 108 ஆம்புலன்ஸ் சேவையும் தொடங்கி வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கழக துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு.

தி.மு.க. எம்.பி.க்கள் மக்கள் நலனுக்காக குரல் கொடுக்க வில்லை என எடப்பாடி பழனிச்சாமி பேசியது தொடர்பான கேள்விக்கு....

பதிலளித்து கூறியது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தி.மு.க. எம்.பி.க்கள் மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் குரல் கொடுத்து போராடி வருகிறோம்.ஆனால் கூட்டணியில் இருந்து கொண்டு தமிழக மக்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருப்பதும், மக்களின் பிரச்சினைகளைப் பற்றி கவலைப் படாதவர் என்றால் அது முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிதான்.திடீரென இது போன்ற விமர்சனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார். அ.தி.மு.க. ராஜ்யசபா எம்.பிக்கள் இதுவரை என்ன பேசி இருக்கிறார்கள் என கேள்வி எழுப்பிய கனிமொழி...

சி.ஏ.ஏ சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தான் அ.தி.மு.க எம்.பி.க்கள் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை பற்றி பேச எந்தவித அருகதையும் அவருக்கு இல்லை.

இவ்வாறு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 117–வது பிறந்தநாள் விழா

# மதுரை வடக்கு மாவட்டம் வாடிப்பட்டியில் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, செப்.14-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேறறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த தினத்தை முன்னிட்டு வாடிப்பட்டியில் உள்ள அண்ணாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி கொண்டாடப்பட உள்ளதாகவும் இதில் கழகத்தினர் அனைவரும் திரளாக பங்கேற்குமாறும் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன் விபரம்:-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு உணர்த்தி அதை நடைமுறைப்படுத்திய வரும், தமிழ்நாட்டு மக்களால் ஒட்டு மொத்த தமிழர்களால் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்பட்டு வரும் என்றும் தமிழ்நாட்டு மக்களின் மனதில் வாழ்பவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள அன்னாரின் திருஉருவச் சிலைக்கு வருகிற 15.09.2025 திங்கள் கிழமை காலை 9.30 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மதுரை வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்,

# ஒளி வீசிய அண்ணன் கோ.சி.மணி எனும் கொள்கைத் தீபம்!

## (செப்டம்பர்13–பிறந்தநாள்)



சோழ மண்டலத்தின் கழகக் காவலர், நினைவில் வாழும் அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 13.

பெரியார், அண்ணா, கழகம் பிறந்த மாதத்தில் பிறந்தவர்.

பெரியார் தந்த சுயமரியாதைத் தினவுடன்,

அண்ணா வழங்கிய குடும்பப் பாச உணர்வுடன்,

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தன் மீது பொழிந்த அளப்பரிய அன்பின் வலிமையுடன், இறுதி மூச்சு அடங்கும்வரை உறுதியுடன் இயக்கத்தைத் தஞ்சை மண்டலத்தில் தகத்தகாயமாக வழிநடத்தியவர்.

அண்ணா இவர்மீது கொண்டிருந்த நன்மதிப்பு,

கலைஞர் இவர்மீது வைத்திருந்த நம்பிக்கை,

தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் தந்தைக்கு நிகராக இவரிடம் காட்டிய உயர் மரியாதை மிக்கப் பேரன்பு,

தொண்டர்களுடனான எளிமை நிறைந்த தோழமை, கட்சி வேறுபாடின்றி மக்களிடம் பெற்றிருந்த மகத்தான செல்வாக்கு,

உள்ளத்தில் நேர்மை, ஓயாத உழைப்பு,

ஒரே கொள்கையில் நடைபோட்ட இலட்சிய உறுதி!

இவற்றின் மொத்த வடிவம்தான்

“கொள்கைமணி” அண்ணன் கோ.சி.மணி அவர்கள் என்பதை நாடே அறியும்.

அந்தக் காலத்தில் வேரூன்றியிருந்த காங்கிரஸ் கட்சி, கீழத் தஞ்சை மாவட்டத்தில் கிராமங்கள்தோறும் விழுது பரப்பியிருந்த

பொதுவுடமை இயக்கம் போன்ற அமைப்புகளை மீறிக் கழகத்தின் கோட்டையாகச் சோழ மண்டலத்தை மாற்றியமைத்திடும் களப்பணியில்,

இவரின் கடும் உழைப்பு, தியாகம் பற்றி ஒரு கட்டுரையில் விவரித்துவிட முடியாது.

தாக்கவரும் எதிர்ப்புகளையெல்லாம் தகர்த்தெறிந்து

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் எட்டுத் திசைகளிலும் இருவண்ணக் கொடியைப்

பட்டொளி வீசிப் பறக்கச் செய்த வீரத்திருமகன்!

பாரம்பரியப் பணக்காரர்களான பண்ணையார்கள் சிலரின் நெறிபிறழ்ந்த போக்கினை,

கோடீசுவரக் குபேரர்களான நிலக்கிழார்கள் பலரின்

அதிகாரபலம் படைத்த ஆதிக்க வன்கொடுமையினை,

துணிச்சலுடன் எதிர்கொண்டு துவம்சம் செய்தவர்.

தோள்கொடுத்துப் பாட்டாளி மக்களுக்கு வாழ்நாள் முழுவதும் துணைநின்றவர்.

“மேக்கிரி மங்கலத்தின் போக்கிரி” என்று கலைஞர் அவர்களால் செல்லமாகப் பாராட்டப்பட்டவர்.

அமைச்சர் உள்ளிட்ட அத்தனைப் பொறுப்புகளிலும் நூறு விழுக்காடு தனித்தன்மையுடன் தன் கடமையினைச் செம்மையாக நிறைவேற்றி, மக்கள் மனத்திலும்

தலைவர் உள்ளத்திலும் நிலைத்த இடத்தைப் பெற்ற பெரும்புகழுக்கு உரியவர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் விரல் நீட்டும் திசையில் கழக மறவர்களை வினைபுரிய வைத்துக் “கழகத்தின் கோட்டை தஞ்சை” என்பதை நிலைநாட்டி நிறுவியவர். இவர்

மாவட்டச் செயலாளராக இருந்த காலம், போற்றுதலுக்குரிய சோழ மண்டலத் தி.மு.க.வின் பொற்காலம் என்பதை வரலாறு கூறும்.

ஆடுதுறைச்சாலையின் இவர் இல்லம், அறிவகம்! அன்பகம்! அறிவாலயம்! மொத்தத்தில் அது, கழகத் தோழர்களின் சரணாலயம்!

சமையற்கட்டில் எரியும் நெருப்பு! அணையா அடுப்பு! நள்ளிரவு சென்றாலும் அயிரை மீன் குழம்புடன் உண்டு, உறங்கித் தங்கிச் செல்லலாம்.

எழுதும்போதே கண்கள் பனிக்கின்றன... இந்த அனுபவம் வாய்த்தவர்களுக்குத்தான்,

“ சுகமான இந்தச் சோகத்தின்” அடர்த்தி புரியும்.

அவரின் ஒவ்வொரு பிறந்த நாளிலும், வழக்கம்போல் விறுவிறுப்பான விருந்துக்களம் விடிகாலையிலிருந்தே தொடங்கிவிடும். காலைச் சிற்றுண்டி, பகல் உணவு என்று, அந்த நாளில், அங்கே சாப்பிடுவதையும், அண்ணன் அவர்களின் வாழ்த்துகளைப் பெறுவதையும் வாழ்நாள் கடமையாகவே கருதியிருந்தவர் பல்லாயிரக்கணக்கானோர் ஆவர்.

மாலையில் சாலையோரத்தில் அமைந்த எளிமையான மேடையில் பிறந்தநாள்விழா வாழ்த்தரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், இசையரங்கம் என ஒவ்வோர் ஆண்டும் பின்னிரவைக் கடந்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளாக நடைபெறும் அந்தப் பசுமையான நினைவுகள், இன்றும் கொஞ்சம் கூட மாறாமல், நெஞ்சம் முழுவதும் நீங்காமல் நின்று ஒளி பரப்பிக்கொண்டுள்ளன.

இரண்டாண்டுகட்கு முன்பு, இரவு 7.30 மணியிருக்கும். சிதம்பரத்திலிருந்து திரும்பி வரும்வழியில், ஆடுதுறையில் அண்ணன் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என, வழக்கம்போல் விரும்பினேன்.

ஊர்வந்து, அவர் வீடும் கடந்து கார் சென்றுவிட்டது.

மீண்டும் காரைத் திருப்பிக் கொண்டு, இதுதான் அண்ணன் வீடு என்று உறுதிப்படுத்தி இறங்கினேன். இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம்? எப்போதும் இரவு நேரத்தில் பகல்போல் வெளிச்சம் தரும், கூடத்து விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்தன. உள்ளே சென்று, விளக்கைப் போட்டு, குடும்ப உறுப்பினர்கள் வெளியில் வந்ததும், அந்த “இலட்சிய வேங்கையின்”



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

திருவுருவப் படத்தை வணங்கி விடை பெறும்போது,

“தயவு செய்து இந்த வீட்டின் கூடத்து விளக்கை இனி இரவில் அணைக்காதீர்கள்.

ஈடும் இணையும் இல்லாத எங்கள் அண்ணன் கோ.சி.மணி என்னும் கொள்கைத் தீபம் ஒளி வீசிய இலட்சியமாளிகை இது!

சாலையில் பயணம் செய்கின்றவர்கள் இந்த இல்லத்தைப் பார்த்துக்கொண்டே செல்லும்போது ஒருவிதப் பரவசம் உருவாகும்.

மாமனிதர் வாழ்ந்த வீடல்லவா! எனும் பெருமிதம் பெருகும்!”

என்று உரிமையுடன் வேண்டுகோள் வைத்தேன்.

தீரர்! தியாகசீலர்! திராவிடப் பேரியக்க வரலாற்றில், சோழமண்டல அத்தியாயத்தின் சுடர்மிகு புகழாளர்,

அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாளில்(செப்டம்பர் 13)

சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் தழைக்கவும்,

தமிழின விடிவெள்ளி, நல்லாட்சி நாயகர்

மாண்புமிகு முதல்வர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில் சமூக நீதி வெல்லவும் சூளுரைப்போம்!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.கிட்டு (எ) கிருஷ்ணன்

**செப்டம்பர் 14 (2017)**



திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றிவர்.

1957ல் பேராசிரியர் அன்பழகனார் அவர்களைஅழைத்து வந்து அம்மாபேட்டை கிளைக் கழகத்தை உருவாக்கி அப்பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில்

# பேரறிஞர் அண்ணா 117-வது பிறந்தநாள் விழா

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை



மதுரை, செப்.14-

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் கழக அலுவலகத்தில் அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி கொண்டாடப்பட உள்ளதாகவும் இதில் கழகத்தினர் அனைவரும் திரளாக பங்கேற்குமாறும் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன் விபரம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு உணர்த்தி அதை நடைமுறைப்படுத்திய வரும், தமிழ்நாட்டு மக்களால் ஒட்டு மொத்த தமிழர்களால் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்பட்டு வரும் என்றும் தமிழ்நாட்டு மக்களின் மனதில் வாழ்பவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலம் கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட அன்னாரின் திருஉருவ படத்திற்கு நாளை (15.09.2025 திங்கள்கிழமை) காலை 9.30 மணி அளவில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இந்நிகழ்வில் மதுரை தெற்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.



கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டியில் அமைக்கப்பட்ட கலைஞர் நூலகத்தை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.இளங்கோ, கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், பால்பாண்டியன், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், பொதும்பு தனசேகர், அருண்குமார், ரகுபதி, சத்திய பிரகாஷ், ரேணுகா, ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், அன்புச்செல்வன், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.